**நாமக்கல் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) அவர்களின் நடவடிக்கைகள்,**
**பிறப்பிப்பவர் :- திருமதி. ஜ.ஹசீனா பேகம்.,**

**ந.க.எண். நி3/30757/2017** **நாள். 16.04.2018.**

பொருள் :- பணியமைப்பு - தமிழ்நாடு அமைச்சுப் பணிகள் - நாமக்கல் மாவட்டம் - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு - 2015-16ம் ஆண்டு - தொகுதி நான்கில் அடங்கிய தட்டச்சர் பதவி - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் பணி நாடுநர்கள் தெரிவு செய்யப்பட்டது - பணி நியமனம் அளிக்கப்பட்டது - பணியில் சேர்ந்து கொண்டது - தட்டச்சர் நிலையில் பணி வரன்முறை செய்தல் மற்றும் தகுதிகாண்பருவம் துவக்குதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

படிக்க :-
1. செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடிதம் எண். 5697/பிஎஸ்டி-ஏ2/2017, நாள். 20.09.2017.
2. நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். நி3/30757/2017, நாள். 16.10.2017.
3. தொடர்புடைய வட்டாரங்களில் இருந்து பெறப்பட்ட அறிக்கைகள்.

❖❖❖

ஆணை :-

மேலே ஒன்றில் படிக்கப்பட்டபடி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால், தமிழ்நாடு அமைச்சுப் பணி விதிகளின் கீழ் தொகுதி நான்கில் அடங்கிய தட்டச்சர் பதவிக்கு, 2015 - 2016ம் ஆண்டு காலிப்பணியிடங்களுக்கு நடத்தப்பட்ட போட்டித் தேர்வின் மூலம் தெரிவு செய்யப்பட்டு, நாமக்கல் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டதின் பேரில், இரண்டில் படிக்கப்பட்டபடி நாமக்கல் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் தற்காலிக பணியமர்வு செய்யப்பட்ட கீழ்காணும் தட்டச்சர்களுக்கு பின்வரும் நிபந்தனைக்குட்பட்டு அவர்களுக்கெதிரே கலம் (4)ல் கண்டுள்ள நாளில் பணியினை வரன்முறை செய்தும், அன்றைய நாள் முதல் தொடர்ச்சியான மூன்றாண்டுகளில் ஈராண்டு கால தகுதிகாண்பருவத்தினை துவக்கியும் இதன் வழி ஆணையிடப்படுகிறது.

| வ. எண். | பெயர், பதவி மற்றும் பணி புரியும் அலுவலகம். (திருவாளர்கள்.) | பணியில் சேர்ந்த நாள். | பணி வரன்முறை செய்தும் தகுதிகாண்பருவம் துவக்கியும் ஆணையிடப்படும் நாள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | எஸ். சுபா, தட்டச்சர், ஊராட்சி ஒன்றியம், கபிலர்மலை. | 16.10.2017 பி.ப., | 16.10.2017 பி.ப., |
| 2. | எஸ். செல்வன், தட்டச்சர், ஊராட்சி ஒன்றியம், நாமகிரிப்பேட்டை. | 16.10.2017 மு.ப., | 16.10.2017 மு.ப., |
| 3. | வீ.கோகிலா, தட்டச்சர், ஊராட்சி ஒன்றியம், நாமக்கல். | 16.10.2017 மு.ப., | 16.10.2017 மு.ப., |
| 4. | சு. அன்புமணி, தட்டச்சர், ஊராட்சி ஒன்றியம், மல்லசமுத்திரம். | 16.10.2017 மு.ப., | 16.10.2017 மு.ப., |
| 5. | பி.நிர்மலா,தட்டச்சர், ஊராட்சி ஒன்றியம், எருமப்பட்டி. | 16.10.2017 பி.ப., | 16.10.2017 பி.ப., |
| 6. | கே. சுமதி, தட்டச்சர், ஊராட்சி ஒன்றியம், மோகனூர். | 16.10.2017 பி.ப., | 16.10.2017 பி.ப., |
| 7. | இரா.மதி, கூடுதல் தட்டச்சர், ஊராட்சி ஒன்றியம், எருமப்பட்டி. | 20.10.2017 மு.ப., | 20.10.2017 மு.ப., |

(திருப்புக . . . .)

நிபந்தனை

இவ்வாணையானது தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் 2015-2016ம் ஆண்டு தொகுதி நான்கில் அடங்கிய தட்டச்சர் பதவிக்கான பணி நாடுநர்கள் தெரிவு தொடர்பாக மாண்பமை சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்ற மதுரை கிளையில் நிலுவையிலுள்ள வழக்குகளில் பிறப்பிக்கப்படும் தீர்ப்புகளுக்குட்பட்டது.

2. இவர்கள், தங்களது தகுதிகாண்பருவ காலத்திற்குள்ளாக அரசாணை (நிலை) எண். 33, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (எம்) துறை, நாள். 02.03.2017ல் குறிப்பிடப்பட்டுள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களுக்கான பின்வரும் துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெற வேண்டும் என்பதோடு, அரசாணை (நிலை) எண். 130, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (எஸ்) துறை, நாள். 22.07.2008ன்படி, தமிழ்நாடு தொழில்நுட்ப கல்வி இயக்ககத்தால் நடத்தப்படும் Computer on Office Automation தேர்வு அல்லது அதற்கு இணையான தேர்விலும் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

| வ. எண். | தாள் குறியீடு எண். | தேர்வின் பெயர் |
|---|---|---|
| 1. | 008 | Department Test for the staff of Rural Development and Panchyat Raj Department - Tamilnadu Panchyat Act, 1994 & Rules and Constitution of India |
| 2. | 166 | The Panchyat Development Account Test. |
| 3. | 010 | Department Test for the staff of Rural Development and Panchyat Raj Department - Scheme Administration. |
| 4. | 172 | The Tamilnadu Government Office Manual Test. |

3. இவ்வாணை குறித்த விவரத்தினை தொடர்புடைய தட்டச்சர்களின் பணிப்பதிவேடுகளில் பதிந்து, அதன் விவரத்தினை (பணிப்பதிவேடு தொகுதி மற்றும் பக்க எண் விவரங்களை உள்ளடக்கி) பணிப்பதிவேட்டின் பக்க நகலுடன் இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைத்திட தொடர்புடைய ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (வளர்ச்சி), நாமக்கல்.

பெறுநர் :- தொடர்புடைய பணியாளர்கள் (அலுவலகம் மூலமாக).

நகல் :-
1. ஆணையாளர்கள்
எருமப்பட்டி, கபிலர்மலை, மல்லசமுத்திரம், மோகனூர், நாமகிரிப்பேட்டை மற்றும் நாமக்கல் ஊராட்சி ஒன்றியங்கள்.
2. முக்கிய ஆணைத் தொகுப்பு.